வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

நாடகமும் அரங்கியலும்

தரம் : 06 **நேரம் :**

பகுதி - I

மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

01. கதையின் கட்டமைப்பில் சரியானது.
   1) நடு - முடிவு - தொடக்கம்
   2) தொடக்கம் - நடு - முடிவு
   3) முடிவு - நடு - தொடக்கம்
   4) தொடக்கம் - முடிவு - நடு

02. நாட்டார் கதைகளில் அடங்காதது
   1) தேவதைக் கதைகள்
   2) பஞ்சதந்திரக் கதைகள்
   3) பிரதேசவாரியான நாட்டார் கதைகள்
   4) விடுகதைகள்

03. சமூகத்தில் உள்ள பாத்திரங்களைக் கொண்ட தொகுதி
   1) வியாபாரி, ஆசிரியர், அரக்கன்
   2) மீனவன், வைத்தியர், விவசாயி
   3) பூசகர், கடவுள், பழங்கள்
   4) பொலிஸ்காரன், சாரதி, கடற்கன்னி

04. உலக நாடக தினம்
   1) தை 27 2) மாசி 27 3) பங்குனி 27 4) சித்திரை 27

05. விசேட ஆயத்தம் ஒத்திகை இன்றி பாத்திரங்களை நடிப்பது
   1) ஊமம் 2) புதிதளித்தல் 3) சித்தரிப்பு 4) வகிபாகம்

சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்புக்குறிக்குள் இடுக.

06. சொல்லாடல் நுட்பங்களில் புறத்தெறிகையும் ஒன்று. ( )

07. பாத்திரத்தின் வயது, வகை, குண இயல்பு உணர்ச்சி, அந்தஸ்து வேறுபாட்டிற்கு ஏற்ப குரல்வழிச் சித்தரிப்பு வேறுபடாது. ( )

08. கடலலையின் ஒலி இயற்கை சூழலின் ஒலியாகும். ( )

09. பாடலுக்கு மாதா தாளமாகும். ( )

10. கூத்துக்கள் பாடலை மாத்திரம் கொண்டவை. ( )

இணைக்குக.

11. நாட்டார் ஆற்றுகைக்கலை	நாடகம்
12. பிள்ளை அழுத கண்ணீர்	குழந்தை ம. சண்முகலிங்கம்
13. நடிகனின் கலை	கும்மி
14. தமிழரின் பாரம்பரிய அரங்கு	சி. ஜெயசங்கர்
15. பஞ்சவர்ண நரியார்	கூத்து

www.lkedu.lk

இடைவெளி நிரப்புக.

16. எழுத்துருவிலுள்ள _____ நடிப்பதை நோக்கமாக கொண்டு எழுதப்பட்டவை.
17. போலச் செய்தலே நாடகத்தின் அடிப்படை என _____ கூறியுள்ளார்.
18. சிறுவர் நாடகத்தின் முன்னோடி என _____ கருதப்படுகின்றார்.
19. நால்வகைச் சித்தரிப்புக்களில் _____ ஒன்றாகும்.
20. உடல்வழிச் சித்தரிப்பு _____ ஆகும்.

(குழந்தை ம. சண்முகலிங்கம், குரல்வழிச் சித்திரிப்பு, அரிஸ்ரோட்டில், சொல்லாடல், ஆங்கில அபிநயம்)

(20 x 2 = 40 புள்ளிகள்)

பகுதி - II

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

01. 1. போலச் செய்தல் என்பதன் மூலம் நீர் கருதுவது யாது?
    2. பாத்திர வகிபாகத்திற்கு ஏற்ப வேறுபடும் அம்சங்கள் நான்கு தருக.
    3. மனிதர்கள் கூட்டமாக இயங்கும் இடங்கள் மூன்று தருக.
    4. அரங்க விளையாட்டுக்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
    5. புதிதளித்தலின் நன்மைகள் எவை?

(5 x 3 = 15 புள்ளிகள்)

02. நீர் கற்ற மரபுவழி நாடகப் பாடல் ஒன்றை வரிக்கிரமமாக எழுதுக.

(15 புள்ளிகள்)

03. நாட்டார் கதையொன்றினை 70 சொற்களுக்கு குறையாமல் எழுதுக.

(15 புள்ளிகள்)

04. கீழ்வரும் சூழல்களில் ஏதாவது ஒன்றினை வரைக.
    1. அழகான வகுப்பறை
    2. எனக்குப் பிடித்த இடம்

(15 புள்ளிகள்)

www.lkedu.lk